செய்தி வெளியீடு எண் - 581 நாள்: 18.07.08

**28 சென்னை மாநகராட்சி மருத்துவர்களுக்கு பணி நியமன ஆணைகள் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (18.07.08) தலைமைச் செயலகத்தில் சென்னை மாநகராட்சி சார்பில் மாவட்ட குடும்ப நலத்துறையில் 17 மருத்துவ அலுவலர்களுக்கும், பொது சுகாதாரத்துறையில் 11 மருத்துவ அலுவலர்களுக்கும் என மொத்தம் 28 மருத்துவ அலுவலர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கி, பணி சிறக்க வாழ்த்து தெரிவித்தார். இம்மருத்துவர்களுக்கு 8000-275-13500 என்ற காலமுறை ஊதிய விகிதத்தில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

சென்னை மாநகரில் வாழும் 50 இலட்சம் மக்களுக்கு சென்னை மாநகராட்சி சார்பில் இலவச மருத்துவ சேவை வழங்கப்பட்டு வருகிறது. மாவட்ட குடும்ப நலத்துறை சார்பில் குறிப்பாக தாய்மார்கள், குழந்தைகள், பள்ளி மாணவ/ மாணவியர்கள் பயன்பெறும் வகையில் 93 நகர நலவாழ்வு மையத்தின் மூலம் மருத்துவ வசதி செய்து கொடுக்கப்படுகிறது. கடந்த ஆட்சியில் மருத்துவ அலுவலர்கள் நிரந்தர முறையில் பணியமர்த்தப்படவில்லை. தொகுப்பூதிய முறையிலேயே பணியமர்த்தப்பட்டனர்.

தற்பொழுது தமிழக அரசு தொகுப்பூதிய முறையில் பணி செய்து வந்த சென்னை மாநகராட்சி 32 மருத்துவ அலுவலர்கள், பணி நிரந்தரம் செய்யப்பட்டுள்ளார்கள். கடந்த நவம்பர் திங்களில் 19 மருத்துவ அலுவலர்கள் வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் பணிமூப்பு அடிப்படையில் தேர்வு பெற்று பணியமர்த்தப்பட்டனர். மேலும் இன்று மாவட்ட குடும்ப நலத்துறை சார்பில் 17 மருத்துவர்களுக்கு நிரந்தர அடிப்படையில் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது.

அதே போன்று பொது சுகாதாரத்துறை கட்டுப்பாட்டில் 74 மருந்தகங்கள், 6 பகுப்பாய்வுக் கூடங்கள், ஒரு பொது பகுப்பாய்வுக்கூடம் மற்றும் தொற்றுநோய்

மருத்துவமனையிலும் மருத்துவர்கள் பணிபுரிந்து வருகின்றனர். தற்பொழுது பொது சுகாதாரத்துறையில் 2001ம் ஆண்டு முதல் காலியாக இருந்த 32 மருத்துவ அலுவலர்கள் பணியிடங்கள் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் பணிமூப்பு அடிப்படையில் 21 மருத்துவர்கள் பணி நியமனம் செய்யப்பட்டார்கள். தற்பொழுது மீதம் காலியாக இருந்த 11 மருத்துவ அலுவலர்கள் பணியிடங்களும் நிரப்பப்பட்டுள்ளது.

இதன் மூலம் நாள்தோறும் சென்னை மாநகரில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட புறநோயாளிகள் மாநகராட்சி மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று பயன் பெறுவார்கள்.

சென்னை மாநகராட்சி சுகாதாரத்துறையில் வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் 118 பணியிடங்கள் மருத்துவர்கள், மருந்தாளுநர்கள் நிரப்பப்பட்டுள்ளனர். ஆக மொத்தம் கடந்த ஒன்றரை வருடங்களில் சென்னை மாநகராட்சியில் 2009 பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன.

இந்நிகழ்ச்சியில் சென்னை மாநகராட்சி மேயர் திரு.மா.சுப்பிரமணியன், துணை மேயர் திருமதி.ஆர்.சத்தியபாமா, ஆணையாளர் திரு.ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., மன்ற ஆளுங்கட்சித்தலைவர் திரு.ந.இராமலிங்கம், மன்ற எதிர்க்கட்சித்தலைவர் திரு.சைதை ப.ரவி, நிலைக்குழுத்தலைவர்(பொது சுகாதாரம்) திரு.அ.மணிவேலன், நியமனக்குழு உறுப்பினர்கள் திரு.த.வி.முத்துக்கிருஷ்ணன், திரு.மு.வேலாயுதம், மண்டலகுழுத்தலைவர் திரு.மு.ஜெயராமன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வெளியீடு– இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.